# ஏப்ரல் – 16 – புனித வார செவ்வாய்

**தூய பெர்னார்த்தே**

**நீங்கள் என்னைத் தேடுவீர்கள் ( யோவா 13:33)**

## முதல் வாசகம் : ஏசாயா 49 : 1 - 6

தீவு நாட்டினரே, எனக்குச் செவிகொடுங்கள் தொலைவாழ் மக்களினங்களே, கவனியுங்கள் கருப்பையில் இருக்கும்போதே ஆண்டவர் என்னை அழைத்தார் என் தாய் வயிற்றில் உருவாகும் போதே என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். என் வாயைக் கூரான வாள்போன்று ஆக்கினார் தம் கையின் நிழலால் என்னைப் பாதுகாத்தார் என்னைப் பளபளக்கும் அம்பு ஆக்கினார் தம் அம்பறாத் தூணியில் என்னை மறைத்துக் கொண்டார். அவர் என்னிடம், "நீயே என் ஊழியன், இஸ்ரயேலே! உன் வழியாய் நான் மாட்சியுறுவேன்" என்றார். நானோ, "வீணாக நான் உழைத்தேன் வெறுமையாகவும் பயனின்றியும் என் ஆற்றலைச் செலவழித்தேன் ஆயினும் எனக்குரிய நீதி ஆண்டவரிடம் உள்ளது என் பணிக்கான பரிசு என் கடவுளிடம் இருக்கின்றது" என்றேன். யாக்கோபைத் தம்மிடம் கொண்டு வரவும், சிதறுண்டு இஸ்ரயேலை ஒன்று திரட்டவும் கருப்பையிலிருந்தே ஆண்டவர் என்னைத் தம் ஊழியனாக உருவாக்கினார் ஆண்டவர் பார்வையில் நான் மதிப்புப்பெற்றவன் என் கடவுளே என் ஆற்றல் அவர் இப்பொழுது உரைக்கிறார். அவர் கூறுவது யாக்கோபின் குலங்களை நிலைநிறுத்துவதற்கும் இஸ்ரயேலில் காக்கப்பட்டோரைத் திருப்பிக் கொணர்வதற்கும் நீ என் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் மீட்பை அடைதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்.

**பதில்பாடல்:** என் வாய் நாள்தோறும் உம் மீட்பை எடுத்துரைக்கும்

## நற்செய்தி : யோவான் 13 : 21 - 33, 36 – 38

அக்காலத்தில், தம் சீடர்களுடன் பந்தியமர்ந்த இயேசு உள்ளம் கலங்கியவராய், "உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்று திட்ட வட்டமாகக் கூறினார். யாரைப் பற்றி அவர் இப்படிக் கூறினார் என்று தெரியாமல் சீடர்கள் குழப்பமுற்று ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். இயேசுவின் சீடருள் ஒருவர் அவர் அருகில் அவர் மார்புப் பக்கமாய்ச் சாய்ந்திருந்தார். அவர்மேல் இயேசு அன்புகொண்டிருந்தார். சீமோன் பேதுரு அவருக்குச் சைகை காட்டி, "யாரைப்பற்றிக் கூறுகிறார் எனக்கேள்" என்றார். இயேசுவின் அருகில் அவர் மார்புப் பக்கமாய்ச் சாய்ந்திருந்த அவர், "ஆண்டவரே அவன் யார்?" என்று கேட்டார். இயேசு மறுமொழியாக, "நான் யாருக்கு அப்பத் துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ அவன்தான்" எனச்சொல்லி, அப்பத் துண்டைத் தோய்த்துச் சீமோன் இஸ்காரியோத்தின் மகனாகிய யூதாசுக்குக் கொடுத்தார். அவன் அப்பத் துண்டைப் பெற்றதும் சாத்தான் அவனுக்குள் நுழைந்தான். இயேசு அவனிடம், "நீ செய்யவிருப்பதை விரைவில் செய்" என்றார். இயேசு ஏன் அவனிடம் இப்படிக் கூறினார் என்பதைப் பந்தியில் அமர்ந்திருந்தோர் யாரும் புரிந்து கொள்ளவில்லை. பணப்பை யூதாசிடம் இருந்ததால், திருவிழாவுக்குத் தேவையானதை வாங்கவோ ஏழைகளுக்கு ஏதாவது கொடுக்கவோ இயேசு அவனிடம் கூறியிருக்கலாம் என்று சிலர் நினைத்துக்கொண்டனர். யூதாசு அப்பத் துண்டைப் பெற்றுக் கொண்டவுடன் வெளியே போனான். அது இரவு நேரம். அவன் வெளியே போனபின் இயேசு, "இப்போது மானிடமகன் மாட்சி பெற்றுள்ளார். அவர் வழியாகக் கடவுளும் மாட்சிபெற்றுள்ளார். கடவுள் அவர் வழியாக மாட்சி பெற்றாரானால் கடவுளும் தம் வழியாய் அவரை மாட்சிப்படுத்துவார். பிள்ளைகளே, இன்னும் சிறிது காலமே உங்களோடு இருப்பேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால் நான் போகும் இடத்திற்கு உங்களால் வர இயலாது. இதையே யூதர்களுக்குச் சொன்னேன் இப்போது உங்களுக்கும் சொல்கிறேன். சீமோன் பேதுரு இயேசுவிடம், "ஆண்டவரே நீர் எங்கே போகிறீர்?" என்று கேட்டார். இயேசு மறுமொழியாக, "நான் போகுமிடத்திற்கு என்னைப் பின்தொடர்ந்து வர இப்போது உன்னால் இயலாது. பின்னரே என்னைப் பின்தொடர்வாய்" என்றார். பேதுரு அவரிடம், "ஆண்டவரே ஏன் இப்போது நான் உம்மைப் பின்தொடர இயலாது? உமக்காக என் உயிரையும் கொடுப்பேன்" என்றார். இயேசு அவரைப் பார்த்து, "எனக்காக உயிரையும் கொடுப்பாயோ? நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் சேவல் கூவாது என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்" என்றார்.

**தியானம்:** காட்டிக் கொடுப்பும் துரோகத்தனமும் அன்று மட்டும் அல்ல இன்றும் தொடர்கின்ற நிகழ்வுதான். ஏன் இந்த காட்டிக் கொடுப்பு? பேராசை, பதவி ஆசை, பொறாமை ஆகியவைதான் காரணம். சமுதாயத் தலைவருக்கு யேசுவில் பொறாமை. மக்கள் அனைவரும் அவரை மதிக்கின்றார்கள், அவர் சொல்வதை கேட்கின்றார்கள், அதனால் தமது பதவிக்கு ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சுகின்றார்கள். அங்கே பதவி ஆசை. யூதாசுக்கு பணத்தின் மீது ஆசை. அவர்தான் யேசுவின் சபையில் நிதி மந்திரி. அவரிடம் பணப்பை இருந்தது. அதனால் அவருக்கு அதன் மீது அலாதியான பிரியம் ஏற்பட்டிருக்கலாம். யேசுவை அழித்துவிட்டால் தான் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம் என்று நினைத்தான். அங்கே பண ஆசை. இத்தனை ஆசைகள் ஒரு அற்புதமானவரின் வாழ்வில் விழையாடியது. பணத்தால், பதவியால் எதனையும் சாதிக்கலாம் என்ற நிலையை நாம் பார்க்கின்றோம். உண்மைகள் மறைக்கப் பட்டன. நீதி குழி தோண்டி புதைக்கப் பட்டது. கூட இருந்தவரே, குற்றமற்றவர் என்று தெரிந்தும் காட்டிக்கொடுக்க முற்படுகின்றார். இது நடைபெறவேண்டும் என்பதுதான் இறை சித்தமாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்கின்ற பக்குவம் சீடருக்கு இருக்க வில்லை. அதனால்தான் பேதுரு அவரை விட்டு விலக மாட்டேன் என்கின்றார். ஆனால் யேசு அவரது பலவீனத்தை எடுத்துக் காட்டுகின்றார். புனித வாரத்தில் நிற்கின்ற நாம் . எமது வாழ்வை சற்று சீர் தூக்கிப் பார்ப்போம். எம் வாழ்வில் காட்டிக்கொடுப்பும், துரோகத்தனமும் இல்லையா? பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டு மற்வர்களைப் பற்றி தேவையில்லாத கதைகளை சொல்ல வில்லையா? மேலதிகாரிகளிடம் நல்ல பெயர் எடுப்பதற்காக மற்றவர்கள்மேல் வீண் பழி சுமத்த வில்லையா? அவை எல்லாம் இப்போது இனிமையாக இருக்கும். ஒரு காலம் வரும். அப்போது இவை எல்லாம் எம் மனங்களை நிம்மதி இன்று துரத்தும், அப்போது என்ன செய்யலாம். இன்று மக்கள் பல்வேறுவகையான மன அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள். மனதில் இருக்கும் சில மறைக்கப்பட்ட உண்மைகளை வெளியே சொல்ல முடியாமல் உள்மனங்களில் அதனைப் பூட்டி வைத்துக்கொண்டு தினமும் அதனைப் பற்றி சிந்திக்கும்போது இவ்வகையான மன அழுத்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். எனவே மனமாற்றத்தின் காலத்தில் மட்டும் அல்ல எந்த நேரத்திலும் நாம் எமது பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு வேண்டுவோம். இறைவன் எம்மை மன்னிப்பார். முதல் வாசகத்தில் கூறப்பட்டதுபோல் கடவுள் நம்மை கருவறையிலேயே தெரிந்து கொண்டுள்ளார். எனவே அவர் நாம் அழிந்து போவதை ஒருபோதும் விரும்ப மாட்டார். மறுதலித்த பேதுருபோல் நாமும் அழுவோம், மன்னிப்பை பெற்றுக் கொள்வோம்